கிறிஸ்தவன்

யார் கிறிஸ்தவன்?

கிறிஸ்துவில் இருப்பவனே கிறிஸ்தவன். 'நீங்கள் என்னிலும் நான் உங்களிலும்' என்று இயேசு கிறிஸ்து சொன்னதை அனுபவத்தில் கொள்பவனே கிறிஸ்தவன் (யோவான் 14:20; 15:5). பாவத்தின் பிடியிலிருந்து கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவனே கிறிஸ்தவன் (எபே. 1:17; 1 கொரி. 6:19,20).

கிறிஸ்தவன் ஆண்டவருக்கு அடிமை (ரோமர் 6:18-22). அவன் ஆண்டவரின் சித்தத்தின்படியே செயல்படத் தன்னை அர்ப்பணித்தவன் (அப். 9:6). கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்பவன் (பிர. 12:13). கிறிஸ்து காட்டிய முன்மாதிரியையே பின்பற்றுபவன் (1யோ. 2:6). அந்தரங்கமான ஒவ்வொரு கிரியைக்கும் கணக்குக் கொடுக்க வேண்டியவன்.

(2 கொரி. 5:10; 1 கொரி. 3:13;

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

4:5). ஆகவே கிறிஸ்தவனுக்கு அவன் மனம் போல் வாழ உரிமையில்லை (ரோமர் 6:11,12). அவன் எதைச் செய்தாலும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யவேண்டும் (1கொரி 10:23,31; 6:12).

கிறிஸ்தவன் இவ்வுலகத்திற்குரியவன் அல்ல (யோ. 17:16; தீத்து 2:12). உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1 யோ. 5:19). சாத்தானே இவ்வுலகத்தின் அதிபதி (யோ. 14:30). உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது (யோபு 9:24). மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், செல்வச் செருக்கும் உலகத்தினாலுண்டானவைகள் (1யோ. 2:16). ஆகவே கிறிஸ்தவன் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் பற்று அற்றவனாக இருக்கவேண்டும் (1யோ. 2:15). அவன் உலக ஆசையைச் சிலுவையில் அறைந்தவன் (கலா. 5:24; 6:14). அவன் உலக மக்களைப் போல் உல்லாச வாழ்க்கையை நாடவேண்டியவனல்ல (ஓசியா

9:1: 1தீ 5:6). அவன் பரிசுத்தத்திற்கு அழைக்கப் பட்டவன் (1பேது. 1:15,16). அவன் பொல்லாங் காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியவன் (1தெச. 5:22). தீமையைப் பாராதபடி தன் கண்களோடே உடன்படிக்கை பண்ணவேண்டியவன் (யோபு 31:1). மாயையைப் பாராதபடி தன் கண்களை விலக்க வேண்டியவன் (சங். 119:37). உலகத்தில் பாவம் பிரவேசிப்பதற்கு வழி திறந்தது கண்தானே (ஆதி. 3:6). உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு. 'இரண்டு கண்ணு டையவனாய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமா யிருக்கும்' (மத். 18:9). பவுல் ஜீவனுக்குள் பிரவேசித்து அழிவில்லாத கிரீடத்தைப் பெறும் படிக்குத் தன் சரீரத்தை ஒடுக்கி, இச்சை யடக்கமாய் வாழ்ந்தார் என்று பார்க்கிறோம். (1கொரி. 9:24-27).

கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத வர்கள் நிலை:-

மனிதர்கள் நித்திய அழிவிற்குத் தப்பித்துக் கொள்வதற்காக அநேக சத்தியங்கள் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஏற்றுக் கொள்ள விருப்பம் இல்லாமல் தீமையான காரியங்களில் ஈடுபடுபவர்களை சாத்தான் முற்றிலும் ஏமாற்றித் தீங்கிழைப்பான். சாத்தானின் மறைவான ஆற்றல், நெறி கேட்டை இவ்வுலகில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவை அண்டிக் கொண்டு தூய்மையான வாழ்க்கையைக் கடைபிடிக்காதவர்கள் பொய்யான போதகங்களால் ஏமாற்றப்பட்டு விடுவார்கள். மேலும் அவர்களுக்கு சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனம் இல்லாததால், தவறான உபதேசங்களை நம்பும்படி சாத்தானின் வஞ்சகச் செயல்களில் சிக்கிக்கொள்ள தேவன் அவர்களை விட்டுவிடுவார் (2தெச. 2:1-12). மனச்சாட்சி கடினப்பட்டுப் போன பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்

பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள் (1தீமோ.4:1). பொருளாசை யுடைய கள்ளப்போதகர்கள் வேதத்திற்குப் புறம்பான கொள்கைகளைத் தந்திரமாகப் புகுத்தி, அநேகரை வசப்படுத்திக் கொள்வார்கள் (2 பேதுரு 2:1-3). ஒரு தவளையைச் சூடான தண்ணீரில் போட்டால் அது துள்ளி வெளியே வந்துவிடும். ஆனால் குளிர்ந்த தண்ணீரில் தவளை இருக்கும்போது அதில் சூடான தண்ணீரை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்தால் அது வெதுவெதுப்பில் உல்லாசமாக நீந்தி மகிழும். தண்ணீர் கொதிக்கும் நிலை வந்தாலும் தவளை வெளியே வர முயற்சிசெய்யாமல் அதிலே கிடந்து மாண்டுவிடும். இதே தந்திரத்தைத்தான் சாத்தானும் உபயோகிக்கிறான்.

எச்சரிப்புகள்:-

கிறிஸ்தவன் சாத்தானின் வஞ்சகத்திற்குத் தப்பித்துக் கொள்ளும்படி வேதத்தில் அநேக எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. "அப்பொழுது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ,

அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" (மத். 24:23,24).

"ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21:36).

"இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1யோ 2:28).

"பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள்

இழுப்புண்டு, உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (2 பேதுரு 3:17).

"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராத படிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற் கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின் வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம் (எபி. 3:12-14; 4:1).

நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக் கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள் (யூதா 20,21).

கிறிஸ்தவனின் எதிர்ப்பார்ப்பு:-

கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்துவில் கிடைக்கும் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள உரிமை உடையவர்களா கிறார்கள். ஆனால் அவர்கள் இவ்வுலக நன்மைகளுக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனிதரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாவார்கள். (1கொரி. 15:19). நவீன உலகில் மக்கள் மிகவும் துரிதமாக செயல்பட வேண்யதிருக்கிறது. அதற்கேற்றாற்

போல் அவர்கள் தேவைகள் உடனுக்குடன் சந்திக்கப்பட விஞ்ஞான வளர்ச்சியும் பேருதவி யாக இருக்கிறது. ஆவிக்குரிய வாழ்விலும் இதே எதிர்பார்ப்பு கிறிஸ்தவர்களிடம் காணப் படுகிறது. உடனடி சரீர சுகம் கிடைக்க, செல்வ செழிப்பு பெற, மற்றும் தங்கள் விருப்பங்கள் எல்லாம் நிறைவேறும்படியாக மக்கள் இங்கும் அங்கும் அலைந்து திரிகிறதை நாம் காண்கிறோம். தங்களைக் குறித்த கர்த்தரின் திட்டம் முழுவதும் வெளிப்படுத்தி, அவை உடனே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற ஆவல் எல்லாரிடமும் காணப் படுகிறது. ஆனால் கடவுளின் செயல்பாட்டைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது? கர்த்தர் சகலத் தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார் (பிர. 3:11). என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசாயா 55:8). நாம் விரும்புகிறபடியெல்லாம் கடவுள் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு என்று

வேதம் தெளிவாகப் போதிக்கிறது. எந்த காரியத்திற்கும் கர்த்தரின் சித்தத்திற்கே நம்மை ஒப்படைத்து (லூக்கா 22:42) அவர் வேளைக் காகக் காத்திருப்பது நமது கடமை (யோ. 2:4). கர்த்தரிடம் நன்மை பெறுவதற்குக் குறுக்கு வழி கிடையாது!

சபைகளில் கொடுக்கப்படும் வாக்குத் தத்தைப் பெற்றுக்கொண்டு அது அப்படியே உடனே நிறை வேற கர்த்தரிடம் எதிர்ப்பார்க்கும் நாம் கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியங்களை அறிந்திருக்கிறோமா? அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியங்களை நாம் செயலாற்ற முயற்சிசெய்கிறோமா?

கர்த்தரின் எதிர்ப்பார்ப்பு:-

உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும், வல்லமையும், பயங்கரமுமான தேவனுமா யிருக்கிறார். அவர் பட்சபாதம் பண்ணு கிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும்

அல்ல (உபா. 10:17). கர்த்தர் யார், அவர் எப்படிப்பட்டவர் என்று இவ்வசனம் தெளிவாகக் கூறுகிறது. அவர் நமக்காகச் செயல்பட நாம் செய்யவேண்டியதென்ன? விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவ ரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6). கிறிஸ்தவர்களாகிய நாம் முதலாவது காரியத்தைச் செய்துவிடுகிறோம். அவரை விசுவாசிக்கிறோம் என்று நமது விசுவாச அறிக்கையிலும் ஒழுங்காகச் சொல்லிவிடு கிறோம். அவர் யாருக்கு பலன் அளிக்கிறார்? கர்த்தரைத் தினமும் தேடுபவர்களுக்குப் பலன் அளிக்கும்படி அவர் செயல்படுகிறார். அவரை எப்படித் தேட வேண்டும்? இது ஒரு முக்கியமான கேள்வி. வேதத்தில் இதற்கான பதிலைப் பார்ப்போம்.

உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய் (உபா. 4:29; எரே. 29:13). என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது. எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன் (ஏசாயா 26:9).

நீ உன் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவி, கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார். நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார் (1 நாளா. 28:9).

எதைத் தேடவேண்டும்? கிறிஸ்து இயேசுவுக் குரியவைகளைத் தேடவேண்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும். கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும்

இடத்திலுள்ள மேலானவைகளைத் தேட வேண்டும். பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதான த்தைத் தேடி, அதைப் பின்தொடரவேண்டும் (பிலிப். 2:21; மத். 6:33; கொலோ. 3:1; 1 பேதுரு 3:11).

ஏன் தேடவேண்டும்?

1. தேவைகள் சந்திக்கப்பட (மத்.6:33)
2. தேவனுடைய கரம் நமக்கு நன்மையாக இருக்க (எஸ்றா 8:22)
3. தேவனால் கைவிடப்படாமல் இருக்க (சங். 9:10)
4. நாம் செய்வதெல்லாம் வாய்க்க (சங். 1:1-3) எரே. 10:21
5. நாம் மேன்மையாக வைக்கப்பட (உபா. 28:1)
6. வியாதியிலிருந்து விடுபட (யாத். 15:26)
7. கர்த்தருடைய கோபத்தின் நாளிலே மறைக்கப்பட (செப். 2:3)
8. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள (ரோமர் 2:7)

நம்முடைய எதிர்பார்ப்புகள் சந்திக்கப்பட நாம் தேவனைத் தேடவேண்டும். அவர் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்?

"உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள். நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளைகளின் நியாயத்தையும். விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். ஏசாயா 1:16,17.

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ் செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். மீகா 6:8.

"நீதியாய் நடந்து, செம்மையானவை களைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ்சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ,. அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவான்; கன்மலை களின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்". ஏசாயா 33:15,16.

"நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்பு கூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரை சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும்

அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்". உபா. 10:12,13.

பிரியமானவர்களே, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் காரியங்களை நாம் பார்த்தோம். தேவன் நமக்காக செயல்பட அவர் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியங்களை நாம் செய்கிறோமா?

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" மத். 7:21.